செ. கு. எண்: 285 நாள் : 21.10.2013

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை –21.10.2013

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், அருகேரி கிராமம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் மஸ்தூராகப் பணி புரிந்து வந்த திரு. தங்கராசு என்பவர் 4.9.2013 அன்று மின்மாற்றியில் மின்சாரம் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையில் மின்கம்பியாளராகப் பணி புரிந்து வந்த திரு. ரமேஷ் என்பவர் 6.9.2013 அன்று சிறைச்சாலைக்குள் மின் கம்பத்தில் ஏறி பழுதினை சரி செய்யும் போது மின்சாரம் தாக்கியதில் மயக்கமடைந்து மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், திருவந்திபுரம், அருள்மிகு தேவநாதசுவாமி திருக்கோயிலில் காவலராகப் பணி புரிந்து வந்த கடலூர் நகரம், திருப்பாதிரிபுலியூர் நகரைச் சேர்ந்த திரு. செல்வராஜ் என்பவர் 6.9.2013 அன்று பெய்த மழையின் போது திருக்கோயிலின் சுற்றுச் சுவர் இடிந்து விழுந்ததில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, கோட்டூர், பாரதி அவென்யுவில் இயங்கி வரும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய கழிவு நீர் பம்பிங் ஸ்டேஷனில், 7.9.2013 அன்று கழிவு நீர் பாதையில் ஏற்பட்ட பழுதினை சரி செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த போது விஷ வாயு தாக்கியதில், காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம், பெரும்பேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. பெருமாள் என்பவரின் மகன் யுவராஜ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், ஆலங்காயம் மின்வாரிய பிரிவில் மஸ்தூராகப் பணி புரிந்து வந்த பெத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சிவா என்பவர் 13.9.2013 அன்று நிம்மியம்பட்டு கிராமத்தில், மின்கம்பத்தில் ஏறி பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், வெள்ளகோவில் நகர மின்வாரிய பிரிவில் உதவியாளராகப் பணி புரிந்து வந்த திரு. பழனியப்பன் என்பவர் 15.9.2013 அன்று வெள்ளகோவில் நகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகே மின்கம்பத்தில் ஏறி பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது தவறி கீழே விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம், திருவந்திபுரம், அருள்மிகு தேவநாதசுவாமி திருக்கோவில் சுற்றுச் சுவர் இடிந்து விழுந்ததில் திருவந்திபுரத்தைச் சேர்ந்த திரு. பிரசன்னா மற்றும் கடலூர் நகரைச் சேர்ந்த திரு. முரளி ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர் என்பதையும்; சென்னை, கோட்டூர், பாரதி அவென்யுவில் இயங்கி வரும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய கழிவு நீர் பம்பிங் ஸ்டேஷனில், கழிவு நீர் பாதையில் ஏற்பட்ட பழுதினை சரி செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த போது விஷ வாயு தாக்கியதில் திரு. முருகன் என்பவர் விஷவாயுவால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதையும் அறிந்து நான் வருத்தமடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், திருக்கோயில் சுற்றுச் சுவர் இடிந்து விழுந்து காயமடைந்த திரு. பிரசன்னா மற்றும் திரு. முரளி; விஷவாயுவால் பாதிக்கப்பட்ட திரு. முருகன் ஆகியோருக்கு தலா 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9